# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**01.11.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. **01.11.2022**
   - ❖ நவ 1-ஆம் தேதி **உள்ளாட்சி தினம்**

## மாநில செய்திகள்

1. **தமிழகம் முழுவதும் கிராம சபை, பகுதி சபை கூட்டங்கள்**
   - ❖ உள்ளாட்சி தினத்தையொட்டி, தமிழகம் முழுவதும் கிராம சபை மற்றும் பகுதி சபைக் கூட்டங்கள் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. சென்னையை அடுத்த **பம்மலில்** நடைபெறும் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கவுள்ளார்
   - ❖ தமிழகத்தில் **குடியரசுதினம் (ஜன 26), மே தினம் (மே1), சுதந்திர தினம் (ஆக.15), காந்தி ஜெயந்தி (அக்.2)** ஆகிய நாட்களில் **12,525 ஊராட்சிகளிலும்** கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுவது வழக்கம்.
   - ❖ இந்தாண்டு நவ 1-ஆம் தேதி உள்ளாட்சி தினத்தன்றும் கிராமசபைக் கூட்டத்தை நடத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
   - ❖ அத்துடன், வேளாண்மை, உணவு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் அந்தந்த கூட்டங்களில் பங்கேற்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
   - ❖ இந்த நிலையில், ஊரக உள்ளாட்சிகளில் கிராம சபை கூட்டத்தைப் போன்று, நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் வார்டு குழு அமைத்து, வார்டு வாரியாக பகுதி சபைக் கூட்டங்களை நடத்த தமிழக அரசு கடந்த ஜூன் மாதம் அரசாணை வெளியிட்டது.
   - ❖ அந்த அரசாணையில், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் என நகர்ப்புற உள்ளாட்சிகளில் வார்டுகள் தோறும், வார்டு கவுன்சிலர் தலைமையில் ஒரு குழுவை உள்ளாட்சி மன்றங்கள் அமைக்க வேண்டும் எனவும், அந்த குழுவுக்கான உறுப்பினர்களையும் மன்றங்களே தேர்வு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
   - ❖ வார்டுகளில் பகுதி சபை கூட்டங்கள் **நவ. 1-ஆம் தேதி உள்ளாட்சி தினத்தில்** நடைபெறவுள்ளது.

2. **ரூ.1,000 கோடியை கடந்த ஆராய்ச்சி வருவாய் சென்னை ஐஐடி சாதனை**
   - ❖ சென்னை ஐஐடி இதுவரை இல்லாத அளவுக்கு முதல் முறையாக **2021-2022-ஆம் ஆண்டில் மட்டும் ரூ.1,000 கோடி** நிதி மற்றும் வருவாயை உருவாக்கியுள்ளது

- .மாநில,மத்திய அரசுகளால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களிலிருந்து ரூ.768 கோடி நிதியாகவும், ரூ.313 கோடி தொழிலக ஆலோசனை வாயிலாகவும் இந்தத் தொகை பெறப்பட்டுள்ளது.
- கம்ப்யூட்டிங், மற்றும் 5 ஜி ஆகிய துறைகளின் வளர்ச்சி காரணமாக, தொழில் துறை மற்றும் மத்திய- மாநில அரசுகள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை உருவாக்குவதில் சென்னை ஐஐடி முன்னிலை வகித்து வருகிறது. இதையடுத்து, இந்த வருவாய் பெறப்பட்டுள்ளது.
  - ✓ சென்னை ஐஐடி.யின் நிதி அதிகரிப்பதற்கு **பேராசிரியர் கே.மங்கள சுந்தர், பேராசிரியர் அருண் தங்கிராலா** ஆகியோர் தலைமையில் **'டைரக்ட்-டு- ஹோம் முறையில் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பக் கல்வி'** - ரூ.300.28 கோடி.
  - ✓ **பேராசிரியர் வெங்கடேஷ் பாலசுப்பிரமணியன்** தலைமையில் **'சாலைப் பாதுகாப்புக்கான திறன்மிகு மையம்** - ரூ.99.5 கோடி;
  - ✓ **பேராசிரியை ஹேமா ஏ.மூர்த்தி** தலைமையில் **இந்திய மொழிகளில் பேச்சுத் தொழில்நுட்பங்கள்'** - ரூ.50.6 கோடி.
  - ✓ **டாக்டர் மிதேஷ் கப்ரா** தலைமையில் **'இந்திய மொழித் தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கான தரவுத் தொகுப்புகள் மற்றும் வரையறைகளை சேகரித்தல்'** - ரூ.47 கோடி ஆகிய முக்கியத் திட்டங்கள் காரணமாக அமைந்தது.
- இது குறித்து **சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி** கூறுகையில், சென்னை ஐஐடி.யில் அதிநவீன மொழிபெயர்ப்பு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தொழிலக ஆலோசனை மற்றும் நிதிசார்ஆராய்ச்சி மையத்தின் **(Industrial Consultancy and Sponsored Research - ICSR)** செயல்திறன் மிகுந்த ஊக்கம் அளிக்கிறது என்றார்.

## மத்திய செய்திகள்

### 1. சோதனை அடிப்படையில் இன்று முதல் எண்ம ரூபாய் பயன்பாடு

- இந்தியாவின் **முதல் எண்ம ரூபாய் (டிஜிட்டல் ரூபாய்) திட்டம்** சோதனை அடிப்படையில் செவ்வாய்க்கிழமையிலிருந்து (நவ.1) பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக **இந்திய ரிசா்வ் வங்கி (ஆர்பிஐ)** தெரிவித்துள்ளது.
- உலகம் முழுவதும் பிட்காயின் உள்ளிட்ட **கிரிப்டோகரன்சிகளின்** பயன்பாடு அதிகரித்ததையடுத்து, அதை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை
- மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமெனப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர்.

- தனியாரால் நிர்வகிக்கப்படும் கிரிப்டோகரன்சிகளை முறைப்படுத்துவது கடினம் என்பதாலும், அதில் பாதுகாப்பின்மை நிலவுவதாலும் ஆர்பிஐ சார்பில் எண்ம ரூபாய் வெளியிடப்படும் என மத்திய அரசு பட்ஜெட்டில் அறிவித்தது.
- முதல்கட்டமாக அரசின் **நிதிப் பத்திரங்களை** மொத்தமாகக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளில் எண்ம ரூபாயின் பயன்பாட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது.
- எஸ்பிஐ, பேங்க் ஆஃப் பரோடா, யூனியன் பேங்க், ஹெச்டிஎஃப்சி, ஐசிஐசிஐ, கோட்டக் மகிந்திரா, யெஸ் வங்கி, ஐடிஎஃப்சி, ஹெச்எஸ்பிசி ஆகிய **9 வங்கிகளுக்கு** சோதனை அடிப்படையிலான எண்ம ரூபாயின் பயன்பாட்டில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது.

### 2. சர்வதேச அளவில் செல்வாக்குமிக்க முஸ்லிம்கள் பட்டியலில் ஹுரியத் தலைவர்

- சர்வதேச அளவில் செல்வாக்குமிக்க 500 முஸ்லிம்களில் பட்டியலில் ஜம்மு-காஷ்மீர் பிரிவினைவாத அமைப்பான ஹுரியத் மாநாட்டுக் கட்சித் தலைவர் **மீர்வாய்ஸ் உமர் ஃபாரூக்** பெயர் இடம் பெற்றுள்ளது.
- ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த **'ராயல் இஸ்லாமிக் ஸ்ட்ரடீஜிக் ஸ்டடீஸ் சென்டர்' மற்றும் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகம்** இணைந்து இந்தப் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.
- காஷ்மீர் மக்களுக்காக இந்தியா-பாகிஸ்தான் என இரு நாடுகளிடமும் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் அப்பிராந்திய மக்களின் மனதை மீர்வாய்ஸ் உமர் ஃபாரூக் வென்றுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.
- சவூதி அரேபியா மன்னர் முகமது பின் சல்மான், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், துருக்கி அதிபர் எர்டோகன், ஈரான் மதத் தலைவர் அயதுல்லா கமேனி, ஜோர்டான் மன்னர் அப்துல்லா உள்ளிட்டோர் பெயர்களும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- கடந்த **2019-ஆம் ஆண்டு ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து** ரத்து செய்யப்பட்டதில் இருந்து மீர்வாய்ஸ் உமர் ஃபாரூக் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்

### 1. மீண்டும் பிரேஸில் அதிபரானார் லூலா டி சில்வா

- பிரேஸிலில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் இடதுசாரி தொழிலாளர் கட்சித் தலைவர் **லூலா டி சில்வா** வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* உலகின் 4-ஆவது பெரிய ஜனநாயக நாடான பிரேஸிலில் அதிபர் தேர்தல் கடந்த 2-ஆம் தேதி நடைபெற்றது.
* இதில், **வலதுசாரி தலைவரான அதிபர் ஜெயிர் பொல்சொனாரோ, இடதுசாரி தொழிலாளர் கட்சித் தலைவரான முன்னாள் அதிபர் லூலா டி சில்வா** உள்பட 11 பேர் போட்டியிட்டனர்.
* இதில், லூலா டி சில்வா **47.9 சதவீத** வாக்குகளும், பொல்சொனாரோ **43.6 சதவீத** வாக்குகளும் பெற்றனர்.
* பிரேஸில் அரசமைப்புச் சட்டப்படி அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 50 சதவீத வாக்குகளைப் பெற வேண்டும். அவ்வாறு இல்லாதபட்சத்தில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்கள் இரண்டாம் சுற்று தேர்தலில் போட்டியிடுவர்.

## தரவரிசை

### 1. போர்ப்ஸ் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் மீண்டும் கவுதம் அதானி .

* போர்ப்ஸ் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் ஜெப் பிஸோஸை பின்னுக்குத் தள்ளி **கவுதம் அதானி மீண்டும் 3-ம் இடம்** பிடித்துள்ளார்.
* இந்திய தொழிலதிபரான கவுதம் அதானிக்கு சொந்தமான நிறுவனங்களின் பங்குகள் கடந்த ஆண்டு மளமளவென உயர்ந்தன.
* இதுவரை 3-ம் இடத்தில் இருந்து வந்த **அமேசான் நிறுவனர் ஜெப் பிஸோஸ்** ரூ.10.5 லட்சம் கோடியுடன் 4-ம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.
* **லூயிஸ் வுட்டான் நிறுவனத்தின் பெர்னார்ட் அர்னால்ட்** ரூ.12.95 லட்சம் கோடியுடன் 2-ம் இடத்தில் நீடிக்கிறார்.
* இந்த 3 பேரும் பட்டியலில் மாறி மாறி இடம் பிடித்து வருகின்றனர்.
* ஆனால், **டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க்** ரூ.18.5 லட்சம் கோடி சொத்துடன் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறார்